## 11 சட்டமன்றத் தொகுதிகளில்

# ‘தமிழ்நாடு தலைகுனியாது’ பரப்புரை - 06.02.2026

## கழகத்தின் வெற்றிக்கு கட்டியம் கூறும் பொதுமக்கள் கூட்டம்!















சென்னை, பிப்.9-

**திராவிட மாடல் அரசின் ஐந்தாண்டு சாதனைகளை விளக்கும் விதமாகவும், ஒன்றிய பாஜக அரசும் அதன் அடிமைக் கூட்டணியும் தமிழ்நாட்டுக்கு செய்து வரும் துரோகத்தை தோலுரிக்கும் விதமாகவும் தமிழ்நாடு முழுக்க தமிழ்நாடு தலைகுனியாது பரப்புரைக்கூட்டமானது நடத்தப்பட்டு வருகிறது.**

கழகத் தலைவரது உத்தரவின் பேரில் 06.02.2026 அன்று 11 சட்டமன்றத் தொகுதிகளில் தமிழ்நாடு தலைகுனியாது பரப்புரைக் கூட்டங்கள் மாபெரும் எழுச்சியோடு நடைபெற்றன.

கிணத்துக்கடவு சட்டமன்ற தொகுதியில் திரு. கடலூர் புகழேந்தி அவர்கள், விழுப்புரத்தில் திரு. எழிலன் நாகநாதன் அவர்கள், ஆவடியில் திரு. கலாநிதி வீராச்சாமி அவர்கள், அம்பத்தூரில் திருமதி. கனிமொழி சோமு அவர்கள், திருப்பெரும்புதூரில் திரு.எஸ்.ஜெகத்ரட்சகன் அவர்கள், சேலம் வடக்கில் திரு. தயாநிதி மாறன் அவர்கள், அவிநாசியில் திரு. அந்தியூர் செல்வராஜ் அவர்கள், மண்ணச்சநல்லூரில் திரு. ஆர். எஸ். பாரதி அவர்கள், குறிஞ்சிப்பாடியில் திரு. திண்டுக்கல் ஐ. லியோனி அவர்கள், பேராவூரணியில் திரு. ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் அவர்கள், சிவகங்கையில் திரு. பொன்.முத்துராமலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

இப்பரப்புரைக் கூட்டத்தின் போது ஐந்தாண்டு திராவிட மாடல் ஆட்சியில் செயல்படுத்தப்பட்டு வரும் சரித்திர சாதனைகளையும் அதனால் தமிழ்நாடு அடைந்துள்ள வளர்ச்சியையும் மக்கள் முன் எடுத்துரைத்தனர் சிறப்பு பேச்சாளர்கள். அத்துடன் ஒன்றிய பாஜக அரசின் பட்ஜெட்டில் தமிழ்நாட்டிற்கு ஒரு பைசா கூட ஒதுக்கப்படாமல் புறக்கணிக்கப்பட்டதையும், கல்வி நிதி, நூறு நாள் வேலை திட்ட நிதி, பேரிடர் நிதி என முறையாக எந்த நிதியும் ஒதுக்காமல் , புதிய வளர்ச்சி திட்டங்களுக்கும் அனுமதி அளிக்காமல் முட்டுக்கட்டை போட்டு தமிழ்நாட்டு மக்களை வஞ்சித்து வரும் பா.ஜ.க. - அ.தி.மு.க. கூட்டணியின் வஞ்சகத்தை பொது மக்கள் மத்தியில் எடுத்துரைத்தனர் கழக நட்சத்திரப் பேச்சாளர்கள்.

இன்றைய பரப்புரைக் கூட்டங்களுக்கு ஆயிரகணக்கான பொது மக்கள் திரண்டு வந்து ஆதரவு வழங்கினர். அதிலும் குறிப்பாக இளைஞர்கள் பட்டாளமும், பெண்களும் அதிகளவு திரண்டு வந்து ஆதரவு தெரிவித்தனர். அதிமுக பாஜக கூட்டணியால் தமிழ்நாடு பட்ட அவலத்தையும், அந்த டப்பா எஞ்சின் தமிழ்நாட்டில் நுழைந்தால் ஏற்படும் ஆபத்தையும் பேச்சாளர்கள் சுட்டிக் காட்டி பேசியது மக்களிடையே பெருத்த வரவேற்பைப் பெற்றது.



புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் நாகுடியில் நடைபெற்ற தமிழ்நாடு தலை குனியாது பொதுக்கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் பொன். முத்துராமலிங்கம், அமைச்சர் எஸ். ரகுபதி சிறப்புரையாற்றினர். இதில் கழகத்தினர் பங்கேற்றனர்.



அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் பகுதி பொதுமக்களின் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில், தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஜெயங்கொண்டம் முதல் சென்னை வரை (வழி: ஆண்டிமடம், விருத்தாசலம்) செல்லும் புதிய அரசு விரைவு போக்குவரத்து கழக பேருந்து சேவையை ஜெயங்கொண்டம் பேருந்து நிலையத்தில் கொடியசைத்து துவக்கி வைத்தார்.



சேலம் கிழக்கு மாவட்டம் வீரபாண்டி வடக்கு ஒன்றியத்தை சார்ந்த பெருமாகவுண்டம்பட்டி ஊராட்சியில், பல்வேறு கட்சிகளிலிருந்து விலகி 50க்கும் மேற்பட்டோர் மாவட்ட கழக செயலாளர் எஸ்.ஆர். சிவலிங்கம் எம்.பி. முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். அப்போது மாவட்ட துணை செயலாளர் சுரேஷ்குமார், ஒன்றிய செயலாளர் சதீஷ்குமார், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ. ஆறுமுகம் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.



கோவை மாநகர் மாவட்டம், தெப்பகுளம் பகுதி, 70 வது வார்டு, தியாகி குமரன் வீதியில் 70அ வட்டக் கழக பொறுப்பாளர் பா.மோகன் ஏற்பாட்டில் பகுதி கழக பொறுப்பாளர் ஆ.கண்ணன் தலைமையில், 70அ வது வட்டக் கழக அலுவலகத்தை கோவை மாநகர் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் துரை.செந்தமிழ் செல்வன் திறந்து வைத்தார். இதில் மாநகர் மாவட்ட துணை செயலாளர் கோட்டை அப்பாஸ், மாவட்ட முன்னாள் துணை செயலாளர் பி.கிருஷ்ணமூர்த்தி, பொதுக்குழு உறுப்பினர் சா.கார்த்திகேயன், எல்.கனகராஜ், 70 வது வட்டக் கழக பொறுப்பாளர் இரா.ராஜேஸ்வரி, 70இ வட்டக் கழக பொறுப்பாளர் டி.சீனிவாசன், மகளிர் அணி என்.கவிதா உள்பட வட்டக் கழக நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், இளைஞர் அணி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் தி.மு.க. சார்பில்

## நாகுடியில் தமிழ்நாடு தலை குனியாது பொதுக்கூட்டம்!

### பொன், முத்துராமலிங்கம்- அமைச்சர் எஸ், ரகுபதி சிறப்புரை!

புதுக்கோட்டை. பிப்.9–

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட திமுக, அறந்தாங்கி சட்டமன்றத் தொகுதி சார்பில் தமிழ்நாடு தலைகுனியாது பொதுக்கூட்டம் நாகுடியில் நடைபெற்றது.

அறந்தாங்கி தெற்கு ஒன்றிய திமுக செயலாளர் பொன். கணேசன் வரவேற்றார்.

அறந்தாங்கி நகர் மன்ற துணைத் தலைவர் தி.முத்து நன்றி கூறினார்.

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட திமுக செயலாளரும், தமிழ்நாடு இயற்கை வளங்கள் துறை அமைச்சருமான எஸ். ரகுபதி தலைமை தாங்கி, ஒன்றிய அரசின் பட்ஜெட்டில் தமிழ்நாட்டிற்கு நிதி ஒதுக்காமல் வஞ்சிக்கும் பாஜக அரசை கண்டிக்கும் வகையில் பொதுமக்களுக்கு அல்வா வழங்கி பேசினார்.

அறந்தாங்கி முன்னாள் சட்டமன்ற உறுப்பினும், ஆவுடையார்கோவில் வடக்கு ஒன்றிய திமுக செயலாளருமான உதயம் சண்முகம், மணமேல்குடி வடக்கு ஒன்றிய திமுக செயலாளர் சக்திராமசாமி, ஆவுடையார்கோவில் தெற்கு ஒன்றிய திமுக செயலாளர் பொன்துரை, அறந்தாங்கி நகர திமுக செயலாளர் க.ராஜேந்திரன், அறந்தாங்கி நகர்மன்றத் தலைவர் இரா.ஆனந்த் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

முன்னாள் அமைச்சரும், திமுக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினருமான பொன். முத்துராமலிங்கம் சிறப்புரை யாற்றினார். நிகழ்வில்

திமுக தீர்மானக்குழு துணைத் தலைவரும், அறந்தாங்கி தொகுதி பார்வையாளருமான சுப. த.திவாகரன், தலைமை செயற்குழு உறுப்பினர் ஆர்.ஆர். கே.கலைமணி, மாவட்ட துணைச் செயலாளர் அடைக்கலம், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் த.மணிராஜன், பொதுக்குழு உறுப்பினர் வீரையா, மாவட்ட நெசவாளர் அணித் தலைவர் பழனியப்பன், மாவட்ட சுற்றுச்சூழல் அணித் தலைவர் ஆவுடையூனுஸ்,மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் சக்திவேல், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் விமலாதிராஜன், மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் பாத்திமாபீவி, தகவல் தொழில்நுட்ப அணி தொகுதி ஒருங்கிணைப்பாளர் அறந்தாங்கி செந்தில்வேலன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் இரா.தமிழ்ராசு, நசுருதீன், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் சின்னையா, பாஸ்கரன், முகமதுநலீம், செந்தில்வேலன், குத்புதீன், துரைராஜ், ஒன்றிய அவைத் தலைவர்கள் ராமலிங்கம், உமாபதி, நகர அவைத் தலைவர் சுப்பிர மணியன், நகரத் துணைச் செயலாளர் ராமசாமி, ஒன்றியத் துணைச் செயலாளர்கள் மாலதிகணேசன், பால்ராஜ், பாலசுப்பிரமணியன், மாவட்ட பிரதிநிதிகள் ராஜேந்திரன், கணபதி, மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள், நகர்மன்ற உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் நிர்வாகி கள், வட்டக்கழக கிளைக்கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### இரா.சு. தங்கராசன்

**பிப்ரவரி 9 (1985)**



இளமைப் பருவத்திலேயே கழகத்தில் ஈடுபாடு கொண்டு பணியாற்ற தொடங்கி, உசிலம்பட்டி வட்டக் கழகச் செயலாளராகவும், தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும், நீண்டகாலம் தொடர்ந்து சேடபட்டி ஒன்றியக் கழகச் செயலாளராகவும் பொறுப்பு வகித்தவர்.

மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி துணைத் தலைவர், உசிலம்பட்டி நிலவள வங்கி தலைவர் பொறுப்பு வகித்தவர்.

இந்தித் திணிப்பு, சட்டநகல் எரிப்பு, மிசா எதிர்ப்பு, கருப்புக் கொடி உள்ளிட்ட கழகம் அறிவித்த பெரும்பாலான போராட்டங்களில் கலந்துகொண்டு பல முறை சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**